முருகப்பெருமான் துணை

**மகான் வியாசமுனிவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.04.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. தரும வழி காட்டும் வள்ளலே
தவசியே ஆறுமுக ஞானியே
ஆறுமுக அரங்கனுன் பெருமை கூறி
அறிவிப்பேன் துல்லிய ஆசி
2. ஆசிதனை குரோதி தகர் திங்கள்
அட்டம திகதி கதிரோன் வாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 08 ம் நாள், 21.04.2024, ஞாயிற்றுக்கிழமை)
ஆசிதனை வியாசமுனிவர் யானும்
அருளுவேன் உலகோர் நலம்பெற
3. நலம்பெற ஞானிகள் பூசையோடு
நன்மைதரும் தரும வழிகளே
பலம்தரும் வாழ்வில் வளம் தருமென
பண்பான வழிகாட்டும் அரங்கன்
4. அரங்கன் ஞானவழித் தேடி
அபயமென பிரணவக்குடிலுக்கு வந்து
வரங்களாக குருவாய் ஏற்றுமே
வல்லமைதரும் தீட்சை அடைந்து
5. அடைந்துமே சீடர் பெருமக்களாக
அனைவரும் தொடர்ந்து வருக
இடர்களை மாயைகளை எல்லாம்
இலகுவாய் கடந்து உலகோர்
6. உலகோர் அரங்கன் தேடுகின்ற
உண்மையானவர்களாக ஞான வான்களாக
உலகெங்கும் ஞானப்படைகளாக
உருவாகி நல்ல மாற்றம் காணும்
7. காணவே அரங்கன் தருமத்தையும்
கட்டளையாக ஏற்று மக்கள்
தான தருமமாக அன்னதான சேவை
தனிப்பெருங்கருணையாகச் செய்துவர

8. வருகவே அவரவர் தனக்கும்
வல்லமையாக தருமபலம் பெருகிட
கருமவினைகள் தனை வென்று
கலியுகம் தனை ஞானயுகமாக மாற்றும்

9. மாற்றும் சக்திநிலை பெருகி
மகான்கள் படைகள் கூடி
ஆற்றல்பட ஞானத் தலைமையை
அகிலம் பாதுகாப்புற வேண்டி உருவாக்கி

10. உருவாக்கியே ஆறுமுகப்பெருமானின்
உயர் ஆசி அனுகூலம்பட
குருவரங்கன் வழிகாட்டலாலும்
குவலயம் ஞான ஆட்சிதனை அடையும்

11. அடையவே தருமபலம் ஞானபலம்
அரங்கன் ஆசிபலம் பெற்றவர்கள்
தடையற அரசியல் களம் காண
தரணிக்கு நல்ல மாற்றம் நிகழும்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—